**செ. கு. எண்:092** **நாள்: 29.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 29.6.2017

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கப்பியறை – ஆ கிராமத்தைச் சேர்ந்த திரு செல்லையா என்பவரின் மகன் திரு தாணுபிள்ளை என்பவர் பழைய கட்டடத்தை இடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, கட்டிடம் இடிந்து விழுந்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 5.2.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், நாகவேடு கிராமத்தைச் சேர்ந்த திரு முருகேசன் என்பவர் 9.3.2017 அன்று வயல்வெளிக்கு சென்று கொண்டிருந்த போது, பாம்பு கடித்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், திருப்பூண்டி கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த திரு பாலசுப்பிரமணியன் என்பவரின் மகன் திரு செல்வராஜ் என்பவர் 22.5.2017 அன்று மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, திடிரென ஏற்பட்ட கடல் அலை சீற்றத்தின் காரணமாக நிலை தடுமாறி கடலில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், கார்த்திகேயபுரம் மதுரா சரஸ்வதி நகரில் 16.5.2017 அன்று மின்மாற்றியிலிருந்து தீ விபத்து ஏற்பட்டதில் திரு சரவணன் என்பவரின் மகன் திரு பால்ராஜ் என்பவர் மின்மாற்றியில் ஏற்பட்ட தீ விபத்தில் பலத்த காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.5.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் கிராமம், மாதா காலணியைச் சேர்ந்த திரு ஆரோக்கியம் என்பவரின் மகன் திரு அருள்தாசன் மற்றும் திரு குருசு என்பவரின் மகன் திரு பெஞ்சமின் ஆகிய இரு மீனவர்களும் 9.6.2017 அன்று கடலில் மீன்பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, திடிரென ஏற்பட்ட

கடல் சீற்றத்தின் காரணமாக கட்டுமரம் கவிழ்ந்ததில், கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த திரு. தாணுபிள்ளை, திரு முருகேசன், திரு. செல்வராஜ், திரு பால்ராஜ் மற்றும் மீனவர்கள் திரு அருள்தாசன், பெஞ்சமின் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட ஆறு நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**